සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Saivanery

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	**சைவநெறி**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 – 20 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. எல்லாப் பொருள்களையும் கடந்தும், அவற்றில் கலந்தும் இருப்பவர்?
   1. கடவுள் 2. சிவன் 3. பரமசிவன் 4. விஷ்ணு

2. தூலலிங்கம் எனப்படுவது யாது?
   1. விமானம் 2. சிகரம் 3. கோபுரம் 4. மணி

3. இலிங்கோற்பவ காலம் என்பது யாது?
   1. காலை 2. மாலை 3. சாயங்காலம் 4. அர்த்தசாமம்

4. திருஞானசம்பந்தர், சிதம்பரக்கோயிலில் பாடிய முதலாவது திருப்பதிக முதலடி.
   1. கற்றாங்கு எரியோம்பிக்... 2. தோடுடைய செவியன்...
   3. மண்ணில் நல்ல வண்ணம்.... 4. சொற்றுணை வேதியன்...

5. மருத்துநீர் தயாரிக்கப்படும் பண்டிகை எது?
   1. தைப்பொங்கல் 2. புத்தாண்டு பிறப்பு
   3. ஆடிப்பிறப்பு 4. தீபாவளி

6. திண்ணனின் தோழர்கள் முறையே.
   1. நாணன், காடன் 2. நாணன், மாடன்
   3. காடன், வாணன் 4. காடன், சாணன்

7. பிதிர் விரதம் ஒன்று.
   1. பங்குனி உத்தரம் 2. மாசிகம்
   3. வைகாசி விசாகம் 4. நவராத்திரி

8. உடலின் ஆறு ஆதார ஸ்தானங்களுள் ஒன்று.
   1. மணிபூரகம் 2. கேள்வி 3. தியானம் 4. சமாதி

9. சக்திகிரி, வள்ளிகிரி, சந்தியாசிமலை என்ற குன்றுகளுடன் இணைந்துள்ள ஆலயம்.
   1. நல்லூர் 2. உகந்தை முருகன் ஆலயம்
   3. கதிர்காமம் 4. செல்லக்கதிர்காமம்

10. வேதங்களின் வழிபாட்டுக்குரிய காண்டம்.
    1. கர்ம காண்டம் 2. ஞான காண்டம்
    3. உபாசனா காண்டம் 4. மேற்கூறிய யாவும்

Past Papers Wiki

11. தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள கோயில் எது?
    1. திருவாரூர்
    2. திருவாமூர்
    3. திருக்கோளிலி
    4. திருநாவலூர்

12. சிவபுராணங்கள் எத்தனை?
    1. 18
    2. 15
    3. 10
    4. 8

13. "பெரியாரது வாழ்க்கை சமய வாழ்க்கை; அவரது ஒவ்வொரு மூச்சும் சைவ மூச்சு" எனும் சிறப்புக்குரியவர்.
    1. ஆறுமுகநாவலர்
    2. அருணாச்சல தேசிகர்
    3. விபுலாநந்தர்
    4. சு. சிவபாதசுந்தரனார்

14. குளிர்ச்சுரம் நீக்க சம்பந்தர் பாடிய பதிகம் எது?
    1. அவ்வினைக்கிவ்வினை...
    2. காரைகள் கூகைமுல்லை...
    3. மடையில் வாளை ...
    4. சதுரம் மறை ....

15. ஆணவம், கன்மம் ஆகிய இரு மலமுடையோர்.
    1. சகலர்
    2. பிரளயாகலர்
    3. விஞ்ஞானகலர்
    4. சித்தாந்திகள்

16. மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமுறை.
    1. தேவாரம்
    2. திருவாசகம்
    3. திருமந்திரம்
    4. திருப்பல்லாண்டு

17. கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பிரிவு.
    1. காணாபத்தியம்
    2. சௌரம்
    3. சைவம்
    4. கௌமாரம்

18. புத்தபெருமான் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணமடைந்த நாள்.
    1. வைகாசி பூரம்
    2. வைகாசி விசாகம்
    3. ஆடிப் பூரம்
    4. ஆடி விசாகம்

19. சுந்தரர் முக்தி அடைந்த தினமும் வயதும்.
    1. ஆடிச் சுவாதி 18
    2. ஆடிச் சுவாதி 16
    3. வைகாசி மூலம் 18
    4. வைகாசி மூலம் 16

20. கந்தலங்காரம், கந்தரனுபூதி பாடியவர்.
    1. கச்சியப்பர்
    2. திருமூலர்
    3. பட்டர்
    4. அருணகிரிநாதர்

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டயமானது.**
- **முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக பிழையின்றி எழுதுக. பாடியவர், தலம், பண் என்பவற்றையும் குறிப்பிடுக.

அ. இறவாத இன்ப அன்பு ....

ஆ. சிவ சிவ என்கிலர் ....

இ. மிண்டு மனத்தவர் ...

ஈ. பாரொடு விண்ணாய்ப் ...

உ. பண்ணின் நேர்மொழியாள்...

(6x2=12 புள்ளிகள்)

02. "நாட்டார் வழிபாடு எல்லோராலும் இலகுவாக மேற்கொள்ளலாம்"

1. எமது வழிபாட்டு முறைகள் எவை?
2. நாட்டார் வழிபாடு வேறு எவ்விதம் அழைக்கப்படும்? இரண்டு தருக.
3. நாட்டர் வழிபாட்டுத் தெய்வங்களின் மூவகைகளும் எவை?
4. குமாரதத்தன் வழிபாடு பற்றி 5 வாக்கியம் எழுதுக.

(2+2+3+5=12 புள்ளிகள்)

03. "பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றில் பதியினை போல் பசு பாசம் அநாதி"

1. சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்?
2. ஆன்மாவின் இயல்புகள் 3 தருக.
3. முப்பொருள்களின் இயல்புகள் எப்படிப்பட்டவை?
4. பதிக்கும், பசுக்கும் உள்ள வேறுபாடுகள் 4 தருக.

(2+3+3+4=12 புள்ளிகள்)

04. "வேதம் அடர்ந்த பெருத்த மரம்; உபநிடதம் பழுத்த கனி"

1. எமது சமயத்தின் முதல் நூல்கள் எவை?
2. உபநிடதம் என்பதன் பொருள் என்ன?
3. உபநிடதங்கள் பல அவற்றுள் 4 தருக.
4. இறைவனைப் பற்றி சுவேதாஸ்வதர முனிவர் கூறும் கருத்துக்கள் 3 தருக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

05. "தெய்வத்தன்மை வாய்ந்த இறை புகழ்பாடும் பாக்கள் - திருமுறை"

1. திருமந்திரம் எத்தனையாம் திருமுறை? யாரால் இயற்றப்பட்டது?
2. பெரிய புராணம் பாடியவர் யார்? அவர் வகித்த பதவி எது?
3. காரைக்காலம்மையார் பேயுருவை விரும்பிப் பெறக் காரணம் யாது?
4. "பக்தியால் யானுனை..." என்ற திருப்புகழில் முருகப் பெருமானை விளித்து பாடிய அடிகள் 4 தருக?

(2+2+4+ 4=12 புள்ளிகள்)

06. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

1. ஆலயம் என்பதன் பொருள் என்ன?
2. ஆலயங்களில் தல விருட்சங்களாக அமையும் விருட்சங்கள் 3 தருக?
3. உடப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் சடங்குகளின் போது இசைக்கப்படும் இசைக்கருவிகள் இரண்டும் வளர்க்கப்படும் கலைகள் இரண்டும் தருக?
4. கதிர்காம ஆலயம் எங்கு அமைந்துள்ளது? தீர்த்தம் எது? ஆலயம் மீது பாடல் பாடியவர் யார்?

(2+3+4+3=12 புள்ளிகள்)

07. பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

1. நாள் மங்கலம்
2. பசு
3. உபநிடதம்
4. முன்னேஸ்வரம்
5. திருப்பல்லாண்டு

(6x2=12 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாந் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** சைவநெறி

Saivam விடைப்பத்திரம் - 8

01. 1	06. 1	11. 1	16. 3
02. 3	07. 2	12. 3	17. 1
03. 4	08. 1	13. 4	18. 2
04. 1	09. 2	14. 1	19. 1
05. 2	10. 3	15. 2	20. 4

(20x2=40 புள்ளிகள்)

01. பாடநூல் பார்க்க. (6x2=12 புள்ளிகள்)

02. 1. ஆகம நெறி சார்ந்த வழிபாடு
ஆகம நெறி சாராத வழிபாடு

2. கிராமிய வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு.

3. ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கற்றெய்வங்கள்

4. * குமாரதத்தனைக் குமாரதம்பிரான் என்பர்.
* வேடர்களால் வழிபடப்படும் தெய்வமாவான்.
* முருக வழிபாட்டுடன் தொடர்புடையது.
* கையில் கோடரி, பொல்லு தாங்கியவனாக காணப்படுவான்.
* ஆவணி மாத கதிர்காமத் தீர்த்தம் நடைபெறும் அன்று ஆரம்பமாகும் சடங்குகள்.
* இறுதியில் கட்டுச் சொல்லுதல் பூசாரியால் மேற்கொள்ளப்படும்.

(2+2+3+5=12 புள்ளிகள்)

03. 1. சிவபெருமான்

2. * தாமாக எதையும் அறியமுடியாதவை.
* அறிவித்தால் அறியும் தன்மை உடையவை.
* தாம் சார்கின்ற பொருளின் வண்ணமாக மாறும் தன்மை கொண்டவை.

3. பதி - அறிவிக்காமலே அறியும் பொருள், என்றும் உள்ள பொருள், அநாதியானது
பசு - அறிவித்தால் அறியும், அநாதியானது.
பாசம் - அறிவித்தாலும் அறியாத சடப்பொருள், அநாதியானது.

4. பதி
* அறிவிக்காமல் அறியும்
* என்றும் உள்ள பொருள்
* சத்துப் பொருள்
* பேரறிவுடையது

பசு
* அறிவித்தால் அறியும்
* சாரும் வண்ணம் மாறும் தன்மை
* அசத்துப் பொருள்
* சிற்றிவுடையது

(2+3+3+4=12 புள்ளிகள்)

04. 1. வேதம், ஆகமம்

2. அருகிலிருந்து கேட்டல்.

3. கடோபநிடதம், பிருகதாரணிய, சுவேதாஸ்வதர, கேநோபநிடதம், ஐதரேய, மைத்ரீ

4. * உயிர்கள் அனைத்திலும் இறைவன் வாழ்கிறான்.
   * இறைவன் பிறப்பு இறப்பு கடந்தவன்.
   * இறைவனை அறிய தியானம் செய்ய வேண்டும்.
   * இறைவனை அறிந்தோர், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவர்.

(2+3+4+3=12 புள்ளிகள்)

05. 1. 10ந் திருமுறை, திருமூலர்

2. சேக்கிழார், முதன் மந்திரி

3. கணவனான பரமதத்தன், அம்மையாரைத் தெய்வமாக வணங்கியமையால் யாவரும் வெறுத்து ஒதுக்கும் பேயுருவை இறைவனிடம் இருந்து அம்மையார் வேண்டிப் பெற்றார்.

4. உத்தமனே, நேசனே, இரத்தினகிரிவாசனே, வித்தகனே, பெருமாளே.

(2+2+4+4=12 புள்ளிகள்)

06. 1. ஆன்மா லயப்படும் இடம்.

2. அரசு, ஆல், வேம்பு, மா, வன்னி, வில்வம்

3. உடுக்கு, பறை, கரகம், கும்மி

4. தென் இலங்கை - மொனராகலை
   தீர்த்தம் - மாணிக்ககங்கை
   அருணகிரிநாதர்

(2+3+4+3=12 புள்ளிகள்)

07. பாடநூல் பார்க்க
1. அலகு 4

2. அலகு 19

3. அலகு 12

4. அலகு 11

5. அலகு 20

(6x2=12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank